LIBRARY
9 DEC 1958
STATE LEGISLATURE MADRAS

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Wednesday, the 10th September 1958.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, the Deputy Chairman (SRI A. M. ALLAPICHAI) in the Chair.

I.—SWEARING-IN OF A MEMBER.

Dr. A. Lakshmanaswami Mudaliar was sworn in.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Ministers' meeting with M.Ps. at Delhi.

* 6 *Q.*—SRI V. V. RAMASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Ministers of this State meet the Members of the Parliament from this State whenever they visit Delhi on public business and discuss with them the various matters of interest to this State such as schemes under the Five-Year Plan and other Inter-State matters; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Chief Minister): (*a*) Yes. The Ministers meet the Members of the Parliament whenever it is found necessary.

(*b*) The Government have no official information of all such meetings.

SRI V. V. RAMASWAMI: லோக் சபையில் நமது ராஜ்யப் பிரதிநிதிகள் நம்முடைய முக்கியமான பிரச்னைகளும், காரியங்களும், சரியாகத் தெரியவில்லை என்றும், நம்முடைய ராஜ்யம் சம்பந்தமாக எல்லா பூர்வாங்க தகவல்களும் தங்களுக்குக் கிடைப்பதில்லை என்றும் புகார் செய்திருக்கிறார்கள். ஆகவே, நமது முக்கியமான திட்டங்களைப் பற்றிப் பார்லிமெண்டில் பேசுவதற்கு இங்கே இருக்கிற அரசாங்கம் தங்களுடைய எல்லா அலுவல்களையும் முக்கியமாகவுள்ள சர்ச்சைகளையும் எடுத்துச் சொல்வதற்கு அவர்களைப் பார்த்துப் பேசி அவர்களுக்கு வேண்டிய தகவல்களைக் கொடுக்க ஏதாவது செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: நானே பார்லிமெண்ட் அங்கத்தினராக இருந்திருக்கிறேன் என்பது கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட புகார் எதுவும் செய்வதற்கு எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. சென்னை ராஜ்ய சர்க்காருடைய அலுவல்கள் எல்லாம் அச்சடித்துப் பிரசுரித்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதைவிட ஏதாவது விஷயத்தைப்பற்றிப் பேசுவதற்கு அதிகப்படியான தகவல் வேண்டுமென்று கேட்டால், அதைக் கொடுக்க சென்னை ராஜ்யம் தயாராக இருக்கிறது.